டிஜிட்டல் டெய்லி
அக்ரி-டாக்டர்
agridoctor.in

கல்யாண்
ஜுவல்லர்ஸ்

agridoctor.in | 5.07.2026 ஞாயிற்றுக்கிழமை | பக்கங்கள் 28 | RNI No.TNTAM/2012/49602 | Vol.14, Issue : 015 - Madurai | Online Edition

# வெங்காய கொள்முதல் விலை குவிண்டாலுக்கு 13% உயர்வு

புது தில்லி, ஜுலை 4

வெங்காயக் கொள்முதல் விலையை, குவிண்டாலுக்கு ரூ.1,875-லிருந்து ரூ.2,125 ஆக, அதாவது 13% அரசு உயர்த்தியுள்ளது. திருத்தப்பட்ட இந்தக் கொள்முதல் விலை நேற்று முதல் (04.07.26) அமலுக்கு வந்துள்ளது. தேசிய வேளாண் கூட்டுறவு சந்தைப் படுத்துதல் கூட்டமைப்பு (NAFED), தேசிய கூட்டுறவு நுகர்வோர் கூட்டமைப்பு (NCCF) ஆகியவை மூலம் வெங்காயம் கொள்முதல் செய்யும் பணி நடைபெற்று வருகிறது. திருத்தப்பட்ட இந்தக் கொள் முதல் விலையானது, கையிருப்பு கொள்முதல் முயற்சிகளுக்கு ஆதரவளிப்பதோடு, வெங்காய விவசாயிகளுக்குச் சிறந்த வருவாயையும் உறுதி செய்யும்.

வேளாண் துறையின் 25-26-ம் ஆண்டுக்கான இரண்டாவது மதிப்பீடுகளின்படி, வெங்காய உற்பத்தி 307.37 லட்சம் மெட்ரிக் டன் என மதிப்பிடப்பட்டுள்ளது. இந்த நிலையில் வெங்காயத்தின் ஒட்டு மொத்த கையிருப்பு போதுமான அளவில் உள்ளது. இருப்பினும், வழக்கமான விலை ஏற்ற இறக்கங்களுக்கு ஏற்ப விலைகள் சிறிதளவு மட்டும் உயரக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

மகாராஷ்டிரா, மத்தியப் பிரதேசம், குஜராத் ஆகிய மாநிலங் களில் தற்போதைய கையிருப்பு போதுமானதாக உள்ளது. வெங்காயத் திற்கு எந்தவிதமான பற்றாக்குறையும் ஏற்படுவதற் கான அறிகுறிகள் இல்லை.



# அட்மா திட்டத்தின் கீழ் எஸ் புதூர் வட்டாரத்தில் கிசான் கோஸ்திஸ் – வயல் விழா

சிவகங்கை, ஜூலை 4

சிவகங்கை மாவட்டம், எஸ் புதூர் வட்டாரத்தில் 2026-27ம் ஆண்டு வேளாண்மைத் துறை சார்பில் அட்மா திட்டத்தின் கீழ் கிசான் கோஸ்திஸ் அனைத்து துறைகள் சார்ந்த ஒருங்கிணைப்பு முகாம் குளத்துபட்டி வருவாய் கிராமத்தில் 03.07.2026 அன்று நடைபெற்றது. இக்கூட்டத்திற்கு வேளாண்மை உதவி இயக்குநர் (பொ) நா. ஞானவேல், தலைமையேற்று வரவேற்புரை வழங்கினார். ஜெயக்குமார், வனவர், வனத்துறை பயிற்சியில் கலந்து கொண்ட விவசாயிகளுக்கு வனத்துறையின் திட்டங்கள் பற்றியும் அதன் மானிய விபரங்கள் பற்றியும் அதன் பயன்கள் பற்றியும் விரிவாக எடுத்து கூறினார்.



வேளாண்மை அலுவலர் ப.கார்த்திகா, தற்பொழுது செயல்பட்டு வரும் திட்டங்கள் பற்றியும் அதன் பயன்பாடுகள் பற்றியும் விரிவாக எடுத்து கூறினார் மற்றும் விளைநிலம் காப்போம் திட்டம் பற்றியும் அதன் பயன்கள் பற்றியும் விரிவாக எடுத்து கூறினார். கௌசல்யா, தோட்டகலைத் துறை அலுவலர் பயிற்சியில் கலந்து கொண்ட விவசாயிகளுக்கு தோட்டகலைத் துறையின் திட்டங்கள் பற்றியும் அதன் மானிய விபரங்கள் பற்றியும் அதன் பயன்கள் பற்றியும் விரிவாக எடுத்து கூறினார்.

வ.சுப்ரமணியன், ஊரக வளர்ச்சி துறை, பயிற்சியில் கலந்து கொண்ட விவசாயிகளுக்கு துறையின் திட்டங்கள் பற்றியும் அதன் பயன்கள் பற்றியும் விரிவாக எடுத்து கூறினார்.



agridoctor.in the Tamil Digital daily published and edited by **M.J.Vasudevan**,
18, Chandrakanthi Nagar, Ponmeni, Bye Pass Road, Madurai - 625 016. Ph. : 4366425.

ராஜேந்திரன், கூட்டுறவுத் துறை பயிற்சியில் கலந்து கொண்ட விவசாயிகளுக்கு தற்பொழுது பயன்பாட்டில் உள்ள திட்டங்கள் பற்றியும் அதன் பயன்கள் பற்றியும் விரிவாக எடுத்து கூறினார். வீ.பாலமுருகன், துணை வேளாண்மை அலுவலர், எஸ் புதூர் பயிற்சியில் கலந்து கொண்ட விவசாயிகளுக்கு தற்பொழுது பயன்பாட்டில் இருக்கும் திட்டங்கள் பற்றியும் அதன் பயன்கள் பற்றியும் விரிவாக எடுத்து கூறினார். மற்றும் மண் மாதிரி சேகரித்தல் மண் பரிசோதனை செய்தல் விதை நேர்த்தி செய்து விதைத்தல் போன்ற தொழில்நுட்பங்கள் பற்றியும் அதன் பயன்கள் பற்றியும் விரிவாக எடுத்து கூறினார். வேளாண் அறிவியல் நிலையம் குன்றக்குடி உதவி பேராசிரியர் அனிதா ஸ்ரீ, குன்றக்குடி பயிர் சாகுபடி முறைகள் கடைபிடிக்க வேண்டிய நவீன தொழில்நுட்பங்கள் மற்றும் புதிய இரகங்கள் அறிமுகம் குறித்து எடுத்துரைத்தார்.



ராதா, வேளாண் வணிகத் துறை, பயிற்சியில் கலந்து கொண்ட விவசாயிகளுக்கு கொப்பரை தேங்காய் விற்பனை முறை மற்றும் விலை நிலவரம் மற்றும் சந்தைபடுத்துதல் மதிப்பு கூட்டுதல் விற்பனை நிலையம் அமைத்து தருதல் போன்ற திட்டங்கள் பற்றியும் அதன் பயன்கள் பற்றியும் விரிவாக எடுத்து கூறினார். சிவராமன், இயற்கை விவசாயி கூட்டத்தில் கலந்து கொண்ட விவசாயிகளுக்கு இயற்கை விவசாயம் சாகுபடி முறை இயற்கை உரங்கள் தயாரிக்கும் முறை பற்றியும் பயன்படுத்தும் முறைகள் பற்றியும் அதன் பயன்கன் பற்றியும் விரிவாக எடுத்து கூறினார்.

முருகேசன், உதவி வேளாண்மை அலுவலர் வேளாண்மைத் துறையின் திட்டங்கள் பற்றி விரிவாக எடுத்து கூறினார். இறுதியில் இக்கூட்டத்தில் கலந்து கொண்ட அனைத்து துறை அலுவலர்களுக்கும் கிராம பொது மக்களுக்கும் துணை வேளாண்மை அலுவலர் நன்றி தெரிவித்தார்.

நிகழ்ச்சிக்கு உண்டான ஏற்பாட்டிளை வட்டார தொழில்நுட்ப மேலாளர் பெ.ஸ்ரீரங்க செல்வி மற்றும் உதவி தொழில்நுட்ப மேலாளர் ம.விஜய் ஆனந்த் சிறப்பான முறையில் ஏற்பாடு செய்திருந்தார்கள்.

அக்ரி-டாக்டர்.காம் பொறுப்புத்துறப்பு (Disclaimer): இந்த மின்னிதழில் வரும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு நாளிதழ் பொறுப்பேற்காது. இதன் உரிமையாளரோ, வெளியீட்டு நிறுவனமோ, வெளியீட்டாளரே, ஆசிரியரோ, மற்ற ஊழியர்களோ எந்த வகையிலும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு பொறுப்பானவர்கள் அல்ல. வாசகர்கள் தாங்களே ஆய்ந்து அறிந்து சுய விருப்பு அடிப்படையில் தீர்மானிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். விளம்பரதாரர்கள், நிறுவனங்களின் பொருட்கள், சேவைகள் போன்றவை குறித்த செய்திகளுக்கும் மேற்கண்ட பொறுப்புத் துறப்பு பொருந்தும் என்பதையும் அறியவும்.

# எல்லா நாளும் தள்ளுபடி உண்டு உங்களுக்கு மட்டும்

KALYAN JEWELLERS

## சிறப்புச்சலுகை



கல்யாண் ஜுவல்லர்ஸ்-ல் நகை எடுக்க வரும்போது **அக்ரி டாக்டர் வாசகர்** என்று அறிமுகப் படுத்திக் கொண்டு சிறப்பான சேவையையும், பிரத்யேக தள்ளுபடியும் பெறுங்கள். இந்த தள்ளுபடி உங்களுக்கு மட்டுமே அதுவும் எல்லா நாட்களிலும்.

குறிப்பு: அதிகார பூர்வமாக கல்யாண் ஜுவல்லர்ஸ் தள்ளுபடி அறிவிக்கும் நாட்களில் அந்த தள்ளுபடி மட்டும் செல்லுபடியாகும்.மேலும் உதவி தேவை எனில் கடையில் இருந்தே எங்களை தொடர்பு கொள்ளுங்கள்.

96331 42000, 86104 71220. 73558 87778, 99408 27084, 80563 05483

# அடுப்பில்லா சமையல்

## 2.3 பச்சை மாங்காய் சட்னி (Raw Mango Chutney)

இது முற்றிலும் நெருப்பில்லாமல் 5 நிமிடங்களில் தயாரிக்கக் கூடிய சுவையான சட்னியாகும்.

**தேவையான பொருட்கள்**

- பச்சை மாங்காய் (தோல் நீக்கி நறுக்கியது) – முதன்மைப் பொருள்
- கொத்தமல்லி – புதிய சுவைக்கு
- இஞ்சி, பூண்டு – சுவைக்காக
- பச்சை மிளகாய் – 2–3 (காரத்திற்கு)
- சீரகத் தூள்
- உப்பு

**செய்முறை**

1. அனைத்துப் பொருட்களையும் மிக்சி ஜாரில் போடவும்.
2. கேப் குளிர்ந்த நீர் சேர்த்து நைசாக அரைக்கவும்.
3. சுவை பார்த்து தேவையானால் எலுமிச்சை சாறு சேர்க்கவும்.

குறிப்பு : இந்த சட்னி விரைவில் ஆக்ஸிஜனேற்றம் அடைந்து பச்சை நிறத்தை இழக்கும். எனவே உடனே பயன்படுத்தாவிடில் குளிர்சாதனையில் வைக்கவும்.

தொகுப்பு : ***G.சுரேஷ்குமார், ஆசிரியர் ஓய்வு, கோவில்பட்டி.***

**நாளை தொடரும்...**



# தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில்

# தேனீ வளர்ப்பு பற்றிய ஒரு நாள் பயிற்சி

கோயம்புத்தூர், ஜூலை 4

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில், பூச்சியியல் துறை சார்பாக ஒவ்வொரு மாதமும் தேனீ வளர்ப்பு சம்பந்தமான ஒரு நாள் பயிற்சி அளிக்கப்படுகிறது. அதன்படி இம்மாதத் திற்கான பயிற்சி, 06.07.2026 திங்கட்கிழமை அன்று அளிக்கப் படும்.

**பயிற்சியின் முக்கிய அம்சங்கள்**

- தேனீ இனங்களை கண்டுபிடித்து வளர்த்தல்
- பெட்டிகளில் தேனீவளர்க்கும் முறை மற்றும் நிர்வாகம்
- தேனீக்கு உணவு தரும் பயிர்கள் மற்றும் மகரந்த சேர்க்கை மூலம் மகசூல் அதிகரிக்கும் பயிர்களின் விவரம்
- தேனைப் பிரித்தெடுத்தல்
- தேனீக்களின் இயற்கை எதிரிகள் மற்றும் நோய் நிர்வாகம்

பயிற்சியில் கலந்து கொள்ள விழைவோர், பயிற்சி நாளன்று காலை 9.00 மணிக்கு பூச்சியியல் துறை, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்திற்கு வந்து அடையாள சான்று சமர்ப்பித்து பயிற்சிக் கட்டணம் ரூ.590/- (ரூபாய் ஐநூற்று தொண்ணூறு மட்டும்) நேரிடையாக செலுத்த வேண்டும். பயிற்சியின் இறுதியில் சான்றிதழ் வழங்கப்படும். பயிற்சியானது காலை 9.00 முதல் மாலை 5.00 மணி வரை நடைபெறும்.

மேலும் விபரங்களுக்கு பேராசிரியர் மற்றும் தலைவர், வேளாண் பூச்சியியல் துறை, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர், தொலைபேசி : 0422 - 6611214, மின்னஞ்சல் : entomology@tnau.ac.in தொடர்பு கொள்ளலாம்.



# கண்டமங்கலம் வட்டாரம், கலிஞ்சி குப்பம் கிராமத்தில் ஆட்மா திட்டத்தில் மூலம் வயல் விழா நிகழ்ச்சி




விழுப்புரம், ஜுலை 4

விழுப்புரம் மாவட்டம், கண்டமங்கலம் ஒன்றியம் கலிஞ்சிக் குப்பம் கிராமத்தில் வேளாண்மை துறையில் வேளாண்மை தொழில்நுட்ப மேலாண்மை முகமை திட்டம் மூலம் வயல் நிகழ்ச்சி நடத்தப்பட்டது. வேளாண்மை உதவி இயக்குனர் Dr.பாலசுப்பிரமணியன் வழிகாட்டுதலின்படி வேளாண்மை அலுவலர் விஜய் முன்னிலை வகித்தார். துணை வேளாண் அலுவலர் செந்தமிழ்செல்வன் வரவேற்புரை அளித்தார்.

திண்டிவனம் வேளாண் அறிவியல் பயிர் பாதுகாப்பு நிலையம் இணை பேராசிரியர் முனைவர் செந்தமிழ் ஒருங்கிணைந்த பூச்சி நோய் மற்றும் நூற்புழு மேலாண்மை குறித்து பயிற்சி அளித்தார் கலிஞ்சிக்குப்பம் சுற்று வட்டார பகுதிகளில் பயிரிடப்படும் மிளகாய் மரவள்ளியில் தோன்றும் இளைப்பேன் மற்றும் பயிர் சிலந்தி மேலாண்மை மற்றும் மல்லிகை மற்றும் சாமந்தியில் தோன்றும் வாடல் நோய் மேலாண்மை குறித்தும் விவசாயிகளின் சந்தேகங்களுக்கு பதில் அளித்தார். கால்நடை மருத்துவர் ஜெயபிரகாஷ், கால்நடை வளர்ப்பு முறைகள் மற்றும் பராமரிப்பு நோய் மேலாண்மை துறை சார்ந்த திட்டங்கள் பற்றி எடுத்துரைத்தார். உதவி வேளாண்மை அலுவலர் கோபி, வேளாண் திட்டப் பணிகள் பற்றி விளக்கமாக கூறினார். ஈஈ காவேரி கூக்குரல் இயக்கம் மூலம் நதிகளை காப்போம் மற்றும் மரம் வளர்ப்பு பற்றி செந்தில்குமார் மற்றும் விமல் ராஜ் விளக்கிக் கூறினார்கள். வட்டார தொழில் நுட்ப மேலாளர் தேன்மொழி ஆத்மா திட்டம் மூலம் செயல்படுத்தப்படும் திட்டங்கள் பற்றி எடுத்துரைத்தார்.

உதவி தொழில் நுட்ப மேலாளர் வீரமணி நன்றி கூறினார். வயல் விழாவிற்கான ஏற்பாடுகளை உதவி தொழில்நுட்ப மேலாளர் அருள் பாபு செய்திருந்தார்.


Rithvik Pipe
25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்
தரச் சான்றிதழ் பேப்பரில் மட்டுமல்ல பைப்பிலும்
பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்
25 ஆண்டுகள் உத்தரவாதம்
நம்பிக்கைக்கு அடையாளம்
100% LEAD-FREE பைப்புகள்
ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
ISI சான்று பெற்ற பைப்புகள்
தரத்திற்க்கு ஒரே அடையாளம்
ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும் நிறுவனம்–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
67 GRADE மூலப்பொருட்கள்
அதிக வலிமை, நீண்ட ஆயுள்
TEST CERTIFICATE – QR CODE மூலமாக
ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
FREE ON-SITE TESTING
விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
சரியான எடை, தடிமன்
ஏமாற்றமில்லா தயாரிப்பு
PRODUCT RANGES
ISI PVC PIPE - 20mm to 250mm (All Classes)
ASTM UPVC PIPE - 21mm to 114mm (SCH 40, SCH80)
ISI CONDUIT PIPE - 16mm to 63mm (Light, Medium, Heavy)
ISI PLUMBING PIPE - 25mm to 50mm (15KG)
ISI BOREWELL CASING PIPE - 125mm to 250mm
PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS
LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK
RITHVIK PIPES PROUDLY TRUSTED BY
LMW
isha
POWERGRID
BHEL
Office
Rithvik Pipe Company, Kannaki Street, Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com
Factory
Rithvik Pipe Company, Opp Kamaraj Colony, R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com
For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741

# தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில்

## காளான் வளர்ப்பு பயிற்சி

கோயம்புத்தூர், ஜூலை 4

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் பயிர் நோயியல் துறை சார்பாக ஒவ்வொரு மாதமும் காளான் வளர்ப்பு சம்பந்தமான ஒரு நாள் பயிற்சி அளிக்கப்படுகிறது. அதன்படி இம்மாதத்திற்கான பயிற்சி 06.07.2026 திங்கட்கிழமை அன்று அளிக்கப்படும்.

பயிற்சியில் கலந்து கொள்ள விழைவோர் பயிற்சி நாளன்று பயிர் நோயியல் துறையில் பயிற்சிக் கட்டணமான ரூ.850/நபர் நேரிடையாக செலுத்த வேண்டும். கல்லூரி மாணவர்களுக்கு ரூ.590/நபர் (அடையாள சான்று அவசியம்). பயிற்சியில் கலந்து கொள்பவர்களுக்கு சான்றிதழ் வழங்கப்படும். பயிற்சியானது காலை 10.00 முதல் மாலை 5.00 மணி வரை நடைபெறும்.

மேலும் விபரங்களுக்கு பேராசிரியர் மற்றும் தலைவர், பயிர் நோயியல் துறை, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர். தொலைபேசி : 0422-6611336, 6611226, 96294 96555, 63792 98064, 93618 89846, மின்னஞ்சல் : pathology@tnau.ac.in தொடர்பு கொள்ளலாம்.



# உளுந்து வம்பன் 12 இறவை சாகுபடி மற்றும் நெல் தரிசில் சாகுபடி செய்ய ஒருங்கிணைந்த தொழில்நுட்பங்கள்



தஞ்சாவூர், ஜுலை 4

தஞ்சாவூரில் மண்டல வாரியான விவசாயி களின் கருத்து கேட்பு கூட்டம் நடைபெற்ற இடத்தில் வேளாண்மை உதவி இயக்குனர் தரக் கட்டுப்பாடு அக்ரி டாக்டர் ராதாகிருஷ்ணன், தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம் தேசிய பயிர் வகை ஆராய்ச்சி மையம், வம்பன், புதுக்கோட்டை மாவட்டம், பயிர் பெருக்க வல்லுனர் டாக்டர் ராமகிருஷ்ணன் சந்தித்தனர். அப்போது புதிதாக வெளியிடப்பட்ட வம்பன் 12 ரகத்தையும் சிறப்பு இயல்பு களை விளக்கினார். இந்தியாவில் பயிரிடப்படும் பயிர் வகை பயிர்களில் உளுந்து முக்கிய பங்கு வகிக்கிறது. வம்பன் 12 உளுந்து ரகம் ஆனது, இறவை பட்டத்திற்கும், நெல் அறுவடை செய்த பிறகு அதன் தரிசிலும், சாகுபடி செய்யலாம். இந்த ரகம் ஆனது ஒளி உணரா திறன் உடையது, நீண்ட காய்கள், அதிக எண்ணிக்கையிலான விதைகள் மற்றும் விதைத்தோல் நீக்கம் செய்வது எளிது அதிக மாவு பொங்கும் தன்மை உடையது. மஞ்சள் தேம்பல் இலை, நெளிவு மற்றும் சாம்பல் நோய்களுக்கு எதிர்ப்பு திறன் கொண்டது.

புரட்டாசி பட்டம் (செப்டம்பர்– அக்டோபர்) மற்றும் மார்கழி பட்டம் (டிசம்பர்) பின் சம்பா, நெல் தரிசுக்கு ஏற்றது. சாகுபடி செய்யும் முறை நிலத்தை நன்கு புழுதி பட உழவு செய்து, கடைசி உழவின் போது ஏக்கருக்கு 5 டன் தொழு உரம் இட்டு, ரோட்டாவேட்டர் கொண்டு சமன் செய்து, அதில் 3X4 மீட்டர் பார்த்திகள் அமைத்து வரிசையாக விதைக்க வேண்டும். ஒரு ஏக்கருக்கு எட்டு கிலோ விதைகளை பயன்படுத்த வேண்டும். விதைப்பதற்கு முன் விதையை, ரைசோபியம் மற்றும் உயிரியல் கட்டுப்பாட்டு காரணியான பிசிலஸ் அல்லது டி. விருடி கொண்டு விதை நேர்த்தி செய்து, விதைகளை 30X10 என்று சென்டிமீட்டர், வரிசைக்கு வரிசை இடைவெளியும், செடிக்கு செடி 10 சென்டிமீட்டர் இடைவெளியில், இட்டு வரிசை முறையில் விதைக்க வேண்டும்.

அதிகமாக மகசூல் பெற பயிர் எண்ணிக்கை ஒரு சதுர மீட்டருக்கு 33 செடிகள் இருப்பது அவசியம். மானாவாரி பயிருக்கு 11 கிலோ யூரியா, 62.5 கிலோ சூப்பர் பாஸ்பேட், 8 கிலோ பொட்டாஷ், 4 கிலோ கந்தகம் ,2 கிலோ நுண்ணூட்டச் சத்து தேவை. இறவை பயிருக்கு யூரியா 22 கிலோ, சூப்பர் பாஸ்பேட் 125 கிலோ, பொட்டாஸ் 17 கிலோ, கந்தகம் 16 கிலோ, நுண்ணுயூட்டசத்து 2 கிலோ, போதுமானது. விதைத்தவுடன் ஒரு முறை பின்னர் மூன்றாவது நாளில் ஒரு முறையும் தண்ணீர் பார்க்க வேண்டும்.

காலநிலை மாற்றம் மற்றும் மண்ணின் தன்மைக்கு ஏற்ப 7 – 10 நாட்களுக்கு ஒரு முறை நீர் பார்க்க வேண்டும். குறிப்பாக உளுந்தின் முக்கிய நிலைகளில் நீர் பாசனம் அவசியமானது. களைக்களின் வளர்ச்சியால் சுமார் 30 – 45 சதவீதம் மகசூல் இழப்பு ஏற்பட வாய்ப்புள்ளது. விதைத்த மூன்றாம் நாள் பெண்டி மெத்தலின் களைக்கொல்லி மருந்தை, ஏக்கருக்கு 1.3 லிட்டர் என்ற அளவில் 200 லிட்டர் தண்ணீரில் கலந்து கை தெளிப் பான் கொண்டு தெளிக்க வேண்டும். மேலும் 20, 25 ஆம் நாளில் ஒரு கைகளை எடுத்து களைகளை கட்டுப்படுத்தலாம்.

உளுந்து பூப்பிடிக்கும் தருணத்தில் ஒரு ஏக்கருக்கு தேவையான 2 சதவீத டிஏபி கரைசலை தெளிக்கலாம். இதற்கு நான்கு கிலோ டிஏபி உரம் 10 லிட்டர் நீரில் ஊறவைத்து, பிறகு தெளிந்த நீரில் 190 லிட்டர் தண்ணீரில் கலந்து விதைத்த முப்பது மற்றும் 45 ஆம் நாட்களில் தெளிக்க வேண்டும். அல்லது டி என் ஏ யு பயிறு அதிசயம் ஏக்கருக்கு இரண்டு கிலோவினை 200 லிட்டர் தண்ணீர் அல்லது டி என் ஏ யூ பயிர் அதிசயம் கரைசலை தெளிக்கும்போது நிலம் ஈரப்பதம் இருக்க வேண்டும். ரெண்டு சதவீத டிஏபி கரைசலை பூ பிடிக்கும் தருணத்திற்கும் பிறகு 15 நாட்கள் கழித்து இரண்டு முறை தெளிக்க வேண்டும். உளுந்து பயிரில் அசுவினி, காய் புழு, புள்ளி காய்புழு, தண்டு ஈ ஆகியவை தாக்கும் முக்கிய பூச்சிகள் ஆகும்.

இவற்றில் அசுவினின் தாக்கம் பயிரின் தொடக்க நிலைகளில் அதிகமாக இருக்கும். எனவே அசுவினை மற்றும் தண்டு ஈ தாக்குதலில் இருந்து காப்பதற்கு 200 மில்லி டைமீத்தோயிட் 30 ஈஸி என்ற மருந்தினை 200 லிட்டர் நீரில் கலந்து கைத்தெளிப்பான் கொண்டு பயிரின் மேற்பரப்பு நன்கு நனையும்படி தெளிக்க வேண்டும்.

உளுந்து பயிரில் ஏற்படும் முக்கிய நோயானது மஞ்சள் தேம்மல் நோய். இந்த நோய்க்கு இந்த ரகம் மத்திய எதிர்ப்பு திறன் உள்ளதால் பாதிப்பு ஏற்பட வாய்ப்பு மிக குறைவு. 80 சதவீதம் காய்கள் முற்றியவுடன் செடியுடன் அறுவடை செய்து காய வைத்து இயந்திரங்கள் மூலமாகவோ அல்லது குச்சிகள் கொண்டு அடித்து விதைகளை பிரித்து எடுக்க வேண்டும்.

அறுவடை செய்த விதையை 10% ஈர பதத்திற்கு வரும் வரை காய வைத்து சேமிக்கலாம் என்று வேளாண்மை உதவி இயக்குனர் தரக்கட்டுப்பாடு அக்ரி டாக்டர் ராதாகிருஷ்ணன் கூறினார்.



# எல்-நினோ தாக்கத்தால் இந்தியாவில் தென்மேற்கு பருவமழை குறைவு? ஜீலை மாதம் எப்படி இருக்கும்?

எல்–நினோ தாக்கத்தால் இந்தியாவில் ஜுன் மாதத்தில் தென்மேற்கு பருவமழை இயல்பை விட 40% குறைவாக பெய்திருக்கிறது. வழக்கமாக ஜுன் மாதம் தொடங்கும் பருவமழை இந்த ஆண்டு தாமதமாக 4ந்தேதி தொடங்கியது.

பருவமழை இந்த ஆண்டு எல்– நினோ தாக்கத்தால் குறைவாக இருக்கும் என கணிக்கப்பட்டுள்ளது. அப்படிப்பட்ட சூழ்நிலையில், பருவமழையின் முதல் மாதமான ஜுன் மாதத்தில் இந்தியா முழுவதும் சாரசரியாக 16.5 செ.மீ மழையே பதிவாகியுள்ளது, இது இயல்பை விட 40% குறைவு என்பது குறிப்பிடத்தக்கது.

**மற்ற மாநிலங்களில் மழை எப்படி?**

குறிப்பாக கேரள, கர்நாடகா போன்ற மாநிலங்களில் பெரும் மழை பற்றாக்குறையாக நிலவுகிறது. கேரளா மாநிலத்தில் 42.7 செ.மீ மழை பதிவாகியுள்ளன. அங்கு இயல்பான மழை அளவு 64.8 செ.மீ அந்த வகையில் இயல்பை விட 34% குறைவு.

கர்நாடகாவில் 12.1 செ.மீ மட்டுமே மழை பதிவாகியுள்ளது. இது இயல்பை விட 39%குறைவு.

தமிழ்நாட்டை பொறுத்தவரையில் இந்த பருவமழையில் மழை மறைவு மாநிலம் என்றாலும் 7.2 செ.மீ மழை பதிவாகியுள்ளது. இது இயல்பை விட42% அதிகமாக தாழ்வுப் பகுதி உருவாகவே இல்லை.

கேரளா, கர்நாடகாவில் ஏற்பட்டுள்ள மழை பற்றாக்குறையில் முக்கிய நீர் நிலைகளில் நீர் இருப்பு வெகுவாக குறைந்து உள்ளது. இதன் காரணமாக தமிழ்நாட்டில் மேட்டூர் அணை, பவானி சாகர், அமராவதி, முல்லைப் பெரியார் போன்ற முக்கிய நீர் நிலைகளில் நீர் இருப்பு மிக கவலைக்கிடமாக உள்ளது.

**ஜுன் மாத மழை நிலவரம் எப்படி இருந்தது?**

ஜுன் மாதத்தில் உருவான எல்-நினோ தாக்கத்தால் 2012ஆம் ஆண்டிற்கு பின்பு வங்கக் கடல், அரபிக்கடலில் ஒரு தாழ்வு பகுதி கூட ஜுன் மாதத்தில் உருவாகவில்லை. இதனால் பருவமழை தீவிரமடையவோ, பரவலாக பெய்யவோ வாய்ப்பு இல்லாமல் போனது.

**நடப்பு ஜுலையில் மழை நிலவரம் எப்படி இருக்கும்?**

4ந் தேதி வட மேற்கு வங்கக் கடலில் புதிய காற்றழுத்த தாழ்வுப்பகுதி உருவாக சாதகமான சூழல் காணப்படுகிறது. இதன் காரணமாக ஜுலை மாதத்தின் முதல் வாரம் முதல் மீண்டும் தென்மேற்கு பருவமழை நாடு முழுவதுமாக பலவீனமாக அமையக்கூடும் என்றும் ஓட்டு மொத்த ஜுலை மாதத்தில் முதல் வாரத்தை தவிர்த்து 2வது, 3வது மற்றும் 4வது வாரத்தில் நாடு முழுவதுமாக மழை பற்றாக்குறையாக தான் இருக்கும்.

இந்த ஆண்டு மேட்டூர், முல்லை பெரியார், பவானிசாகர் போன்ற முக்கிய நீர் நிலைகள் நிரம்புவதற்கான வாய்ப்புகள் மிகவும் குறைவு.

எனவே விவசாயிகள் வழக்கமான பயிர் சாகுபடி முறைகளை கையாளாளமல் மாற்று பயிர் சாகுபடி (சிறுதானியங்கள், பயறு வகை)யை கடைபிடிக்க வேண்டும்.

இருக்கின்ற நீர் ஆதா ரத்தை பயன்படுத்தி கூடுதலான மகசூல் பெற என்னென்ன செய்ய வேண்டிய வழிமுறைகளை தெரிந்து செயல்படுத்த வேண்டும்.

தகவல் : **அக்ரி சு.சந்திரசேகரன், வேளாண் ஆலோசகர், அருப்புக்கோட்டை. 94435 70289.**



# தலைவாசல் அருகே வேப்பநத்தத்தில் வெண்டை சாகுபடி பண்ணை பள்ளி

சேலம், ஜூலை 4

சேலம் மாவட்டம், தலைவாசல் வட்டாரம், வேப்பநத்தம் கிராமத்தில் வெண்டை சாகுபடியில் ஒருங்கிணைந்த பயிர் மேலாண்மை குறித்த பண்ணை பள்ளியின் இரண்டாம் வகுப்பு பயிற்சி முகாம் நடைபெற்றது.



இப்பயிற்சி முகாமிற்கு வேளாண்மை உதவி இயக்குனர் வேல்முருகன் தலைமை தாங்கி, இரசாயன உரங்களைக் குறைத்து இயற்கை முறையில் காய்கறி பயிர்களை எவ்வாறு சாகுபடி செய்வது என்பது குறித்து விவசாயிகளுக்கு விரிவாக விளக்கமளித்தார்.

தொடர்ந்து நடைபெற்ற பயிற்சி வகுப்பில், பயிற்றுவிப்பாளர் பிரவீன் வெண்டை பயிரைத் தாக்கும் பூச்சிகளைத் தடுக்கும் ஒருங்கிணைந்த பூச்சி மேலாண்மை முறைகள் குறித்தும், பயிற்றுவிப்பாளர் வரதராஜன் பயிர்களுக்கான நீர் மேலாண்மை மற்றும் சரியான உர மேலாண்மை முறைகள் குறித்தும் விவசாயிகளுக்குத் தெளிவாக எடுத்துரைத்தனர்.

மேலும், வட்டாரத் தொழில்நுட்ப மேலாளர் சக்தி பயிர்களில் தோன்றும் களைகளைக் கட்டுப்படுத்தும் களை மேலாண்மை முறைகள் பற்றி விளக்கினார். இதனைத் தொடர்ந்து, உதவி தொழில்நுட்ப மேலாளர் முத்துவேல் பூச்சிகளைக் கட்டுப்படுத்தும் இனக்கவர்ச்சி பொறிகளை (Pheromone trap) வயல்வெளியில் எவ்வாறு அமைப்பது மற்றும் பயன்படுத்துவது என்பது குறித்து விவசாயிகளுக்கு நேரடி செயல்விளக்கம் செய்து காண்பித்தார்.

இப் பயிற்சியில் வேப்பநத்தம் மற்றும் அதன் சுற்றுவட்டாரப் பகுதிகளைச் சேர்ந்த 25-க்கும் மேற்பட்ட முன்னோடி விவசாயிகள் கலந்து கொண்டு பயன் பெற்றனர்.

Rithvik Pipe

# 25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்



## பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- 25 ஆண்டுகள் உத்தரவாதம்
  நம்பிக்கைக்கு அடையாளம்
- 100% LEAD-FREE பைப்புகள்
  ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
- ISI சான்று பெற்ற பைப்புகள்
  தரத்திற்க்கு ஒரே அடையாளம்
- ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும் நிறுவனம்–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
- 67 GRADE மூலப்பொருட்கள்
  அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- TEST CERTIFICATE – QR CODE மூலமாக
  ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- FREE ON-SITE TESTING
  விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
- சரியான எடை, தடிமன்
  ஏமாற்றமில்லா தயாரிப்பு

PRODUCT RANGES

| ISI PVC PIPE - 20mm to 250mm (All Classes) | ASTM UPVC PIPE - 21mm to 114mm (SCH 40, SCH80) | ISI CONDUIT PIPE - 16mm to 63mm (Light, Medium, Heavy) | ISI PLUMBING PIPE - 25mm to 50mm (15KG) | ISI BOREWELL CASING PIPE - 125mm to 250mm |
|---|---|---|---|---|

PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS
LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK

RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

LMW isha POWERGRID BHEL

Office
Rithvik Pipe Company, Kannaki Street, Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

Factory
Rithvik Pipe Company, Opp.Kamaraj Colony, R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741

# பண்ணைக்குட்டை மற்றும் கிணறுகளில் கூட்டுமீன் வளர்ப்பு குறித்த விவசாயிகள் கண்டுணர் சுற்றுலா



அரியலூர், ஜூலை 4

அரியலூர் மாவட்டம், ஜெயங்கொண்டம் வட்டார வேளாண் துறையில் செயல்படுத்தப்பட்டு வரும் அட்மா திட்டத்தின் கீழ் பண்ணைக் குட்டை மற்றும் கிணறுகளில் கூட்டுமீன் வளர்ப்பு குறித்த மாவட்ட அளவிலான விவசாயிகள் கண்டுணர் சுற்றுலா எரவாங்குடி கிராமத்தில் பண்ணைக்குட்டையில் பல்வேறு இரக மீன்களை வளர்த்து வெற்றி கண்டுள்ள அனுபவம் வாய்ந்த விவசாயி ராஜசேகரனது பண்ணையில் வட்டார வேளாண் உதவி இயக்குநர் (பொ) மகேந்திரவர்மன் தலைமையில் நடைபெற்றது.

கிரீடு வேளாண்மை அறிவியல் நிலைய கால்நடை மருத்துவர் சரண்யா விவசாயிகளுக்கு மீன் வளர்ப்பு முறைகள் குறித்து விளக்கமளித்தார்.

நீர்பிடிப்புத் திறனுள்ள மண்ணில் தான் பண்ணைக் குட்டைகளை அமைக்க வேண்டும் எனவும் நீரின் கார அமிலத் தன்மை மற்றும் மண் ஆய்வு செய்த பிறகு தான் பண்ணைக் குட்டை அமைக்க வேண்டும் எனவும் விளக்கினார். மீன் வகைகளான ரோகு, கட்லா, மிர்கால் கெண்டை, வளர்ப்பு முறைகள் குறித்தும் மீன்களுக்கு அளிக்க வேண்டிய தீவனம், அளவு, நீர் பராமரிப்பு முறைகள், மீன் அறுவடை மற்றும் விற்பனை வாய்ப்புகள் குறித்து விளக்கினார்.

மீன் எடையை அதிகரிக்க மீன் தீவனத்துடன் கோதுமை, கடலை பிண்ணாக்கு, மக்காச்சோளம் ஆகியவற்றையும் தீவனமாக அளிக்க வேண்டும் எனவும், நீரில் மஞ்சள்தூள் மற்றும் சுண்ணாம்பு கலந்து இட்டால் மீன் நோய்கள் வராமல் தடுக்கலாம் எனவும் விளக்கமளித்தார். இத்துடன் பண்ணைக் குட்டை அமைப்பதற்கு அரசு வழங்கும் மானிய விரபரங்கள் குறித்தும் விளக்கி விவசாயிகளின் சந்தேகங்களுக்கு பதிலளித்தார்.

உதவி வேளாண் அலுவலர் பாலாஜி குறுவை சிறப்பு தொகுப்புத் திட்டம் குறித்தும் கிடங்கு இடுபொருட்கள் விபரம் குறித்தும் விளக்கினார். வட்டாரத் தொழில்நுட்ப மேலாளர் மீனாட்சி அட்மா திட்ட செயல்பாடுகள் குறித்தும் விவசாயிகள் அனைவரும் வேளாண் துறை மற்றும் சகோதரத் துறைகளின் திட்டங்களைப் பெற்று பயனடைய விவசாயிகள் தனித்துவ அடையாள எண் பெற வேண்டியது அவசியம் எனவும் விளக்கினார்.

உதவி தொழில்நுட்ப மேலாளர் ஆரோக்கிய ராஜ், மண் ஆய்வு செய்து உரமிடுதலின் அவசியம் குறித்து விளக்கினார். உதவி தொழில்நுட்ப மேலாளர் மகேஷ்குமார், பிரதம மந்திரி கவுரவ நிதி உதவித் திட்டம் பெற பின்பற்ற வேண்டிய நடைமுறைகள் குறித்து விளக்கி நன்றி கூறினார்.

இக்கண்டுணர் சுற்றுலாவிற்கான ஏற்பாடுகளை அட்மா திட்ட அலுவலர்கள் மற்றும் முன்னோடி விவசாயிகள் செய்திருந்தனர்.

# விதை நேர்த்தி - ஓர் பார்வை

விதை நேர்த்தி என்பது பூஞ்சாணக் கொல்லி, பூச்சிக்கொல்லி போன்றவற்றைத் தனித்தோ (அ) ஒருங்கிணைத்து விதைகளின் மேல் இடுதல் மூலம், அவற்றை மண் மூலம் பரவும் நோய்கள் மற்றும் சேமிப்பில் விதைகளைத் தாக்கும் பூச்சிகள் போன்றவற்றில் இருந்து காத்து தொற்று நீக்குதலே ஆகும். விதை நேர்த்தி செய்வதன் பலன்கள் கீழ்க்கண்டவையாகும்.

**விதை நேர்த்தியின் பயன்கள்**

1. பயிர் நோய்களை பரவாமல் தடுக்கிறது.

2. விதை அழுகல் மற்றும் நாற்று அழுகல் போன்றவற்றிலிருந்து காக்கிறது.

3. முளைப்புத்திறனை மேம்படுத்துகிறது.

4. சேமிப்பில் தாக்கும் பூச்சிகளிடம் இருந்து பாதுகாக்கிறது.

5. மண்ணில் உள்ள பூச்சிகளைக் கட்டுப்படுத்துகிறது.

**விதை நேர்த்தியின் போது தேவையான முன்னெச்சரிக்கை**

நேர்த்தி செய்யப்பட்ட விதைகள் மனிதர்கள் மற்றும் விலங்கு களின் உணவாக பயன்படுத்தக்கூடாது என்பதில் மிகுந்த கவனம் செலுத்த வேண்டும். இதைத் தடுப்பதற்காக, நேர்த்தி செய்யப்பட்ட விதைகளின் மேல், இதனை உட்கொண்டால் ஆபத்தானது என்ற

விவரச்சீட்டை பொருத்த வேண்டும். விற்கப்படாத நேர்த்தி செய்யப்பட்ட விதைகளை உண்ணும் உந்துதலைத் தடுக்க விற்பதற்குத் தேவையான அளவு விதைகளையே நேர்த்திசெய்ய வேண்டும்.

நேர்த்தி செய்யப் பயன்படுத்தும் முறைகளில் சரியான அளவு உபயோகிப்பதில் கவனம் தேவை. ஏனெனில் அதிகமாகவோ / குறைவாகவோ உபயோகிக்கும் அளவு, நேர்த்தி செய்யாத விதைகளில் ஏற்படும் பாதிப்பைவிட அதிகமாகும். அதிக ஈரப்பதம் உள்ள விதைகளை திடமான திரவ இராசயனங்களில் நேர்த்தி செய்யும் போது விதைகள் பாதிப்பிற்கு அதிக வாய்ப்புள்ளது.

**பல்வேறு பயிர்களின் விதை நேர்த்தி பரிந்துரைகள்**

● கரும்பு – கார்பென்டாசிம் (0.1 சதவிகிதம்), (அ) ட்ரைக்கோடெர்மா / 4–6 கி / கிலோ விதை – இதனால் வேர் அழுகல், வாடல் நோய் கட்டுப்படுத்தப்படும்.

● நெல் – க்ளோரோபைரிபாஸ் / 3 கிராம் / கிலோ விதை, (அ) ட்ரைக்கோடெர்மா / (5–10 கிராம் / கிலோ விதை) – இதனால் வேர் அழுகல் நோய், மற்ற பூச்சி தாக்குதல் கட்டுப்படுத்தப்படும்.

● மிளகாய் – ட்ரைக்கோடெர்மா விரிடே 4 கி / கிலோ விதை நேர்த்தி, (அ ) கார்பென்டாசிம் @ 1 கிராம் / 100 கிராம் விதை இதனால் ஆந்தரக்னோஸ், வேர் அழுகல் நோய் கட்டுப் படுத்தப்படும்.

● தக்காளி – டி விரிடே ÷ 2 கிராம் / 100 கிராம் விதை (அ) காப்டன் 75 டபிள்யூ எஸ் 1.5–2 கி / கிலோ விதை. இதனால் மண் மூலம் பரவும், பூஞ்சான நோய்கள் முன் கருகல் வேர் அழுகல் நோய் கட்டுப்படுத்தப்படும்.

● பயிறு வகை காய்கறிகள் – ட்ரைக்கோடெர்மா விரிடே @ / 2 கிராம் / 100 கிராம் விதை, இதனால் விதை மூலம் பரவும் நோய் கட்டுப்படுத்தப்படும்

● வெண்டை – பேசிலோமைசஸ்விலாசினஸ் மற்றும் ஸ்யூடோ மோனாஸ்ப்ளூரெசன்ஸ் @ 10 கி / கிலோ விதை. இதனால் பூஞ்சான நோய்கள், வேர் முடிச்சு நூற்புழு கட்டுப்படுத்தப்படும் என மதுரை சரக விதைப்பரிசோதனை அலுவலர் சி.சிவகாமி, பரமக்குடி விதைப்பரிசோதனை நிலைய மூத்த வேளாண்மை அலுவலர் ச.முருகேஸ்வரி, வேளாண்மை அலுவலர் ப.வீரபாண்டியன் ஆகியோர் தெரிவித்தனர்.

# சத்துக்கள் நிறைந்த கேழ்வரகு

இந்தியாவில் விளையும் உணவு தானியத்தில் 25 சதவீதம் கேழ்வரகு ஆகும். அரிசி மற்றும் கோதுமையை விட ஊட்டச்சத்து நிறைந்தது ஆகும்.

கேழ்வரகில் அமைந்துள்ள புரதமானது புராலமின் மற்றும் குளுட்டனின் மற்றும் உடலுக்குத் தேவையான அனைத்து அமினோ அமிலங்களும், கேழ்வரகில் காணப்படுகின்றன. இது நார்ச்சத்து நிறைந்தது ஆகும்.



பைட்டேட் மற்றும் டேனினும் பி வைட்டமினும் நிறைந்தது. கேழ்வரகினை முளைகட்டி குழந்தைகளுக்கு மால்ட் தயார் செய்வது பழங்காலந்தொட்டு நம் பழக்கத்தில் உள்ளது.

கேழ்வரகு நாட்டின் பல்வேறு பகுதிகளில் பல்வேறு பருவங்களில் வளர்ந்து வருகிறது. இது ஒரு மானாவாரி பயிராகவும், பொதுவாக தமிழ்நாட்டில் ஜூன், ஜூலையில் சாகுபடி செய்யப்படுகிறது. மானாவாரியில் பயிரிட பையூர் 1, கோ 13, கோ.ஆர்.ஏ 14, பையூர் 2 ஆகியவை ஏற்ற ரகங்கள் ஆகும். 450-500 மிமீ சராசரி மழை கேழ்வரகிற்கு போதுமானது.

### விதைப்பு மற்றும் விதை அளவு

நல்ல மகசூல் பெறுவதற்கு, ஒரு எக்டருக்கு 4-5 லட்சம் பயிர் எண்ணிக்கை அவசியம். இதற்கு குறைவாகவோ அல்லது அதிகமாகவோ பயிர் எண்ணிக்கை இருந்தால், மகசூல் குறையும். கேழ்வரகு சாகுபடியில் பலமுறைகள் உள்ளன. வரிசைக்கு வரிசை 22.5-30 செ.மீ இடைவெளி கொடுக்க வேண்டும். கேழ்வரகு விதைகள் மிகவும் சிறியதாக உள்ளதால் ஒரு ஹெக்டருக்கு 15-20 கிலோ விதைகள் தேவைப்படும். விதையிடும் கருவியைப் பயன்படுத்தி, செடிக்கு செடி 7.5-10 செ.மீ இடைவெளி விட்டு விதைக்க வேண்டும்.

விதையிடும் கருவி மூலம் வரிசை விதைப்பில் விதையுடன் உரமும் சேர்த்து அளிப்பதால் ஊட்டச்சத்துகள் பயன்பாடு செடிக்கு திறம்பட கிடைக்கிறது.

மானாவாரி பயிரில் அதிக மகசூல் பெற சரியான அளவு பயிர் எண்ணிக்கை பராமரிக்க வேண்டும். குறைவான மழையளவு உள்ள பகுதிகளில், விதைப்பிற்கு பின் தேவையான அளவு ஈரம் இல்லாமல் இருந்தால், முளைப்புத்திறன் பாதிக்கும். இப்படிப்பட்ட சூழ்நிலைகளில், விதை கடினமாக்குதல் முறையை பின் பற்றினால் முளைப்புத்திறன் அதிகரிப்பதோடு மட்டுமல்லாமல், நாற்றுகளுக்கு, வீரியம் உண்டாவதுடன், வறட்சியைத் தாங்கும் திறன் ஏற்படுகிறது.

### விதைகளை கடினமாக்குதலின் செயல்முறை

1 கிலோ விதைக்கு 1 லிட்டர் தண்ணீர் வீதம் விதைகளை 6 மணி நேரம் தண்ணீரில் ஊற வைக்க வேண்டும். தண்ணீரை வடித்துவிட்டு விதைகளை ஈரத்துணியில் 2 நாட்கள் கட்டி வைக்க வேண்டும். இந்நிலையில் விதைகள் முளைக்க துவங்கி விடும்.

ஈரத்துணியிலிருந்து விதைகளை அகற்றி பின்னர் உலர்ந்த துணியில் 2 நாட்கள் நிழலில் உலர வைக்க வேண்டும். இவ்வாறு கடினமாக்கப்பட்ட விதைகளை விதைப்பிற்கு பயன்படுத்த வேண்டும்.

**பயிர் சுழற்சி**

பச்சை பயறு / உளுந்து / கொள்ளு / சோயாபீன் / மொச்சை அல்லது வேர்கடலை பயிர்களுடன் ராகியை பயிர் சுழற்சி முறையில் பயிரிடும் போது, வளிமண்டல தழைச்சத்து மண்ணில் நிலைநிறுத்தப்படுவதால், ரசாயன உரங்களின் தேவை குறைவதுடன் அதிக விளைச்சல் கிடைக்கின்றது.

**கலப்புப் பயிர்**

மானாவாரி பகுதியில் கேழ்வரகுடன் பொதுவாக துவரையை கலப்புப்பயிராக 4:1 என்ற விகிதத்தில் பயிர் செய்வதால் அதிக விளைச்சல் கிடைக்கும்.

விவசாயிகள், வேளாண் விதை உற்பத்தியாளர்கள், வேளாண் விதை விற்பனையாளர் தங்களிடம் உள்ள விதையில் தரத்தை அறிந்து கொள்ள மதுரை, நாகமலை புதுக்கோட்டையில் உள்ள விதைப்பரிசோதனை நிலையத்தில் விதை மாதிரி ஒன்றுக்கு ரூ.80/- வீதம் செலுத்தி பரிசோதனை செய்து கொள்ளுமாறு விதைப் பரிசோதனை அலுவலர் சி.சிவகாமி மற்றும் வேளாண் அலுவலர்கள் சி.கமலாராணி மற்றும் பெரி.இராமலட்சுமி கேட்டுக் கொள்கிறார்கள்.




# பருத்தியில் ஒருங்கிணைந்த பூச்சி மேலாண்மை குறித்த விஞ்ஞானிகள் – விரிவாக்கப் பணியாளர்கள் – விவசாயிகள் இணைப்பினை வலுப்படுத்தும் முகாம்



மதுரை, ஜுலை 4

மதுரை மாவட்டம், தே.கல்லுப்பட்டி வட்டாரம், வேளாண்மை தொழில்நுட்ப மேலாண்மை முகமை திட்டத்தின் கீழ் பருத்தியில் ஒருங்கிணைந்த பூச்சி மேலாண்மை குறித்த விஞ்ஞானிகள் – விரிவாக்கப் பணியாளர்கள் – விவசாயிகள் இணைப்பினை வலுப்படுத்தும் முகாம் 03.07.26 அன்று காரைக்கேணி கிராமத்தில் நடைபெற்றது. தே.கல்லுப்பட்டி வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் மா.விமலா, முன்னிலையில் முகாம் நடைபெற்றது. இயற்கை விவசாயத்தை ஊக்குவித்தல், இரசாயன உர பயன்பாட்டை குறைத்து மண்வளத்தை மேம்படுத்துதல், திரவ உயிர் உரங்களை பயன்படுத்துதல் குறித்து அறிவுறுத்தினார். விவசாயிகளின் தனித்துவ அடையாள எண் பதிவு செய்தல் மற்றும் அதன் முக்கியத்துவம் குறித்து விவசாயிகளுக்கு எடுத்துரைத்தார்.

மேற்கண்ட முகாமில் விவசாயிகளுக்கு மதுரை வேளாண்மை அறிவியல் நிலைய திட்ட ஒருங்கிணைப்பாளர் முனைவர் கி.சுரேஷ், தொழில்நுட்ப உரை வழங்கினார். அவர் பூச்சிகளை எதிர்க்கும் திறன் கொண்ட இரங்களைப் பயிரிடுதல், மஞ்சள் நிற ஒட்டும் பொறி, இன கவர்ச்சி பொறி, இயற்கை பூச்சி விரட்டி தயாரிப்பு வரப்பு பயிர்கள், பயிர் சுழற்சி முறையை கையாளுதல் குறித்து விவசாயிகளுக்கு விரிவாக எடுத்துரைத்தார். பருத்தி சாகுபடி செய்துள்ள விவசாயிகளின் வயல்களில் கள ஆய்வு மேற்கொண்டு தண்டு கூன் வண்டு பாதிப்பு மற்றும் கட்டுப்படுத்தும் முறையினை விவசாயிகளுக்கு எடுத்துரைத்தார். வேளாண்மை அலுவலர் சு.சரவணகுமார், துறை சார்ந்த திட்டங்கள் மற்றும் மானிய விவரங்கள் குறித்து விவசாயிகளுக்கு எடுத்துரைத்தார். உதவி வேளாண்மை அலுவலர் இரா.இராதாகிருஷ்ணன், விவசாயிகளுக்கு மண் மாதிரி சேகரிப்பு மற்றும் மண் ஆய்வு முடிவின்படி உரமிடுவது பற்றி விவசாயிகளுக்கு எடுத்துரைத்தார். வட்டார தொழில்நுட்ப மேலாளர் ம.ஹேமலதா நன்றியுரை கூறினார். உதவி தொழில்நுட்ப மேலாளர்கள் பா.மாரிமுத்து, க.துர்கா, இம்முகாமிற்க்கு ஏற்பாடு செய்திருந்தனர். இம்முகாமில் 100 விவசாயிகள் கலந்து கொண்டு பயனடைந்தனர்.


கல்யாண்
ஜுவல்லர்ஸ்
Toll Free No. 1800 - 4257333

# இப்கோ கூட்டுறவு வார விழா

# தமிழகம் முழுவதும் நானோ உரங்கள் குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சிகள்



திருவாரூர், ஜுலை 4

கூட்டுறவு அமைச்சகத்தின் 5-வது நிறுவன தின விழாவை முன்னிட்டு, இப்கோ (IFFCO) நிறுவனத்தின் சார்பில் தமிழ்நாட்டின் பல்வேறு மாவட்டங்களில் கூட்டுறவு வார விழா நடைபெற்று வருகிறது. இப்கோ கள அதிகாரிகள் தலைமையில் மரக்கன்று நடும் விழா, நானோ உரங்கள் குறித்த விழிப்புணர்வு வாகனப் பிரச்சாரம், விவசாயிகள் கருத்தரங்கம் மற்றும் வயல் விழா உள்ளிட்ட பல்வேறு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு வருகின்றன. இதன் ஒரு பகுதியாக திருவாரூர் மாவட்டத்தில் நடைபெற்ற நானோ விழிப்புணர்வு முகாம், இப்கோ கள அதிகாரிகள் மற்றும் கூட்டுறவுச் சங்கங்களின் இணைப்பதிவாளர் சித்ரா தலைமையில் நடைபெற்றது. மயிலாடு துறை மாவட்டத்தில் மாவட்ட ஆட்சித் தலைவர் எஸ்.ஸ்ரீகாந்த், சீர்காழி சட்டமன்ற உறுப்பினர் எம்.செந்தில் செல்வன் மற்றும் வேளாண்மை இணை இயக்குநர் விஜயராகவன் ஆகியோர் முன்னிலையில் நிகழ்ச்சி நடைபெற்றது. தஞ்சாவூர் மாவட்டத்தில் கூட்டுறவுச் சங்கங்களின் இணைப் பதிவாளர் தயாள விநாயகம் தலைமையிலும், கள்ளக்குறிச்சி மற்றும் திருவள்ளூர் மாவட்டங் களில் இப்கோ கள அதிகாரிகள் மற்றும் சம்பந்தப்பட்ட கூட்டுறவுத் துறை அதிகாரிகள், அதில் திருவள்ளூரில் ஜெய ஸ்ரீ தலைமை யிலும் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

இந்நிகழ்ச்சிகளில் பங்கேற்ற அனைவரும் கூட்டுறவு உறுதிமொழி ஏற்றனர். மேலும், மரம் வளர்ப்பதன் அவசியம், சுற்றுச்சூழல் பாதுகாப்பு, இயற்கை வளங்களைப் பாதுகாப்பதில் ஒவ்வொருவரின் பங்கு, நானோ உரங்களின் பயன்கள் மற்றும் அவற்றைப் பயன் படுத்தும் முறைகள்குறித்து விரிவான விழிப்புணர்வு வழங்கப்பட்டது. விவசாயிகளிடையே நவீன வேளாண் தொழில்நுட்பங்கள் மற்றும் சுற்றுச்சூழலுக்கு உகந்த விவசாய நடைமுறைகளை ஊக்குவிக்கும் வகையில், இப்கோ நிறுவனத்தின் இந்த விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் தொடர்ந்து பல்வேறு மாவட்டங்களில் நடைபெற்று வருகின்றன.

# வாலாஜா வட்டாரத்தில் டிஜிட்டல் பயிர் சர்வே செய்திட தன்னார்வலர்களுக்கு அழைப்பு

இராணிப்பேட்டை, ஜுலை 4

இராணிபேட்டை மாவட்டம், வாலாஜா வட்டாரத்தில் வேளாண்மைத் துறையினருடன் இணைந்து மின்னணு பயிர் சாகுபடி கணக்கீடு (Digital Crop Survey) 2026 பணிகளை துல்லியமாக மேற்கொள்ள ஆர்வமுள்ள இளைஞர்கள் மற்றும் பொதுமக்கள் தன்னார்வலர்களாக பதிவு செய்து பணியாற்ற வாலாஜா வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் ஜி.திலகவதி, அழைப்பு விடுத்துள்ளார்.

மின்னணு பயிர் சாகுபடி கணக்கீடு என்பது சாகுபடி செய்யப்பட்டுள்ள விவசாயிகளின் பயிர் விவரங்கள் நேரடியாக களத்திற்கு சென்று சேகரிக்கப்பட்டு அரசின் பல்வேறு திட்டங்கள் சரியான பயனாளிகளை சென்றடையவும், மொத்த பயிர் சாகுபடி பரப்பினை துல்லியமாக மதிப்பீடு செய்யவும் உதவுகிறது. இக்கணக்கெடுப்பு பணியானது காரீப், இராபி மற்றும் கோடை என வருடத்திற்கு மூன்று பருவங்களில் மேற்கொள்ளப்படுகிறது. இப்பணி மேற்கொள்ள இணைய வசதியுள்ள ஆன்ட்ராய்ட் போன் அவசியமானதாகும்.

மேலும், இப்பணி மேற்கொள்ளும் தன்னார்வலர்களுக்கு, பதிவு மேற்கொள்ளும் உட்பிரிவு எண் ஆனது நடப்பு தரிசு நிலமாக இருப்பின் ஒரு உட்பிரிவிற்கு ரூ.3, ஒற்றை பயிர் சாகுபடியாக இருப்பின் ஒரு உட்பிரிவிற்கு ரூ.5, ஒரே உட்பிரிவு எண்ணில் கூடுதல் பயிர் பதிவு செய்யும் பட்சத்தில் ஒரு பயிருக்கு ரூ.2 வீதம் ஊக்கத்தொகையானது நேரடியாக தன்னார்வலர் களின் வங்கிக் கணக்கிற்கு வழங்கப்பட உள்ளது.

எனவே, நடப்பு காரீப் பருவத்தில் சாகுபடி செய்யப்பட்டுள்ள



பயிர் விவரங்களை மின்னணு பயிர் சாகுபடி கணக்கீடு மூலம் நேரடியாக களத்தில் சென்று சேகரிக்க ஆர்வமுள்ள தன்னார் வலர்கள் வாலாஜா வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் ஜி.திலகவதியின் வாட்ஸ் ஆப் எண்ணில் (94437 12963) தங்களது பெயர், செல்போன் எண், கிராமம் ஆகிய விவரங் களை தெரிவித்து இப்பணியில் பங்கேற்க அழைக்கப்படு கிறார்கள். பதிவு செய்யும் தன்னார்வலர்களுக்கு இப்பணி மேற்கொள்வது தொடர்பான பயிற்சிகள் விரிவாக வழங்கப்படும் என வாலாஜா வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் தெரிவித்துள்ளார்.



# பயறு வகைகளில் தன்னிறைவு இயக்கத்தின் அறுவடை பின்செய் நேர்த்தி இயந்திர மானியம்

## விவசாயிகள் பயன்பெற அழைப்பு

புதுக்கோட்டை, ஜூலை 4

புதுக்கோட்டை மாவட்டத்தில் 4365 எக்டர் பரப்பளவில் விவசாயிகள் பயறுவகை பயிர்களை சாகுபடி செய்து வருகின்றனர். உளுந்து பயிரின் உற்பத்தியை பெருக்கி பயறு வகைகள் உற்பத்தியில் தன்னிறைவு அடையும் நோக்கில், வேளாண் துறை மூலம் பயறு வகைகளில் தன்னிறைவுக்கான இயக்கம் என்ற திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

2025-26 முதல் 2030-31 வரை செயல்படுத்தப்படும் இத்திட்டத்தின் கீழ் பயறு மதிப்பு கூட்டுதல் மையம் நிறுவ இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

இதனால் பயறு வகை பயிர்களின் மதிப்புக்கூட்டி அறுவடைக்கு பிந்தைய இழப்புகள் குறைத்து விவசாயிகளின் வருமானம் உயர்வதுடன் கிராமப்புறங்களில் வேலைவாய்ப்புகள் அதிகரிக்கும்.

இந்த திட்டத்தின் கீழ் பயறு உற்பத்தியை மேம்படுத்தி மதிப்பு கூட்டுதல் மூலம் விவசாயிகள் கூடுதல் வருமானம் பெற்று பயனடையலாம். அந்த வகையில், அறுவடை பின்செய் இயந்திரங்கள் அமைக்க திட்டச் செலவில் 33 சதவீதம் வரை நிதி உதவி அல்லது அதிகபட்சமாக ரூ.25 லட்சம் வரை மானியம் இவற்றில் எது குறைவோ அதற்கான மானியம் வழங்கப்படும்.

இந்த மானிய தொகையில் சேமிப்பு கிடங்குகள் கட்டுவதற்கு 30 சதவீத மானியம் வழங்கப்படுகிறது. உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்கள், விவசாயிகள் தொகுப்பு கட்டமைப்புகள், தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு சங்கங்கள் மற்றும் தனிநபர்கள் இந்த திட்டத்தின் கீழ், பயன் பெற தகுதி உடையவர் ஆவர்.

எனவே, ஆர்வமுள்ள நபர்கள் புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள தங்கள் பகுதி வட்டார வேளாண்மை உதவி இயக்குநர்கள் மற்றும் வேளாண்மை துணை இயக்குநரை (வேளாண் விற்பனை மற்றும் வேளாண் வணிகம்) அணுகி பயன்பெறுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.